செ.வெ.எண்.318 நாள்.16.05.2018.

## *பத்திரிக்கைச் செய்தி*

01.01.2019-ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல் தீவிர சிறப்பு சுருக்கமுறை திருத்தம் செய்வதற்கு இந்திய தேர்தல் ஆணையம் உத்திரவிட்டுள்ளதின் பேரில் தீவிர சிறப்பு சுருக்க முறை திருத்தம் தீவிர சிறப்பு சுருக்க முறை திருத்தம் 2019 *Special Summary Revision of Electoral Rolls of intensive nature, 2019* 11.05.2018 முதல் நடைபெற்று வருகிறது.

இதன் முதற்கட்டமாக திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அனைத்து வாக்குச்சாவடி நிலை அலுவலர்களும் (BLO) வீடு வீடாக சென்று வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியினை 15.05.2018 முதல் 20.06.2018 முடிய மேற்கொள்ள உள்ளனர். மேற்படி ஸ்தல ஆய்வின்போது வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் (BLO) அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாக்காளர்கள் விபரங்கள் அடங்கிய BLO Register-ஐ எடுத்துச் சென்று வீடு வீடாக குடும்ப தலைவர் மற்றும் உறுப்பினர்கள் விபரங்களை சரிபார்த்திட உள்ளனர். மேலும் ஸ்தல ஆய்வின்போது 01.01.2018 அன்று வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க தகுதியான நபர்களாக இருந்தும் நாளது தேதிவரை வாக்காளர் பட்டியலில் பெயர் இடம் பெறாத 18-19 வயதுடைய விடுபட்டுள்ள நபர்கள் விபரம், 01.01.2019 அன்று 18 வயதினை நிறைவு செய்திடும் 18 வயது இளம் வாக்காளர்கள் விபரம், ஒன்றுக்கு மேற்பட்ட பதிவுகள் / இறந்த வாக்காளர்கள் / நிரந்தரமாக இடம் பெயர்ந்த வாக்காளர்கள் விபரங்கள் மற்றும் வாக்காளர் பட்டியலில் உள்ள திருத்தங்கள் குறித்த விபரங்கள் சேகரிப்பட உள்ளது.

மேற்படி வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் (BLO) ஸ்தல ஆய்வின்போது 01.01.2019 அன்று 18 வயது பூர்த்தியடைய உள்ளவர்கள் அதாவது 31.12.2000 வரை பிறந்த அனைவரும் வாக்காளர் பட்டியலில் தங்கள் பெயரினை புதிதாக சேர்த்திட படிவம் 6 மனு அளிக்கலாம். மேலும், புதிதாக வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க படிவம் 6, பெயர் நீக்கம் செய்ய படிவம் 7, பெயர் மற்றும் இதர திருத்தங்கள் செய்திட படிவம் 8, ஒரே சட்டமன்ற தொகுதிக்குள் முகவரி மாற்றம் செய்திட படிவம் 8ஏ மற்றும் வெளிநாடுவாழ் இந்தியர்கள் பெயர் சேர்க்க படிவம் 6ஏ-ல் விண்ணப்பங்கள் அளிக்கலாம். இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரைப்படி வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் (BLO) ஒவ்வொரு வீட்டிற்கும் நேரடியாக வருகை தரும் போது தங்கள் குடும்பத்தில் உள்ள அனைத்து வாக்காளர்களின் விபரம், அனைத்து குடும்ப உறுப்பினர்களின் வாக்காளர் அடையாள அட்டை எண் மின்அஞ்சல் முகவரி, அலைபேசி எண் 01.01.2019-ஐ தகுதி நாளாக கொண்டு 18 வயது பூர்த்தியாகும் நபர்கள் குறித்தும் விபரங்கள் அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இந்த தீவிர சிறப்பு சுருக்க முறை திருத்தம் 2019-ன் போது வீடு வீடாக வருகை தரும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு தேவையாக விபரங்களை வழங்கி தக்க ஒத்துழைப்பு வழங்குமாறு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் அனைத்து வாக்காளர்கள், பொதுமக்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.